# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2090/34 - 2018 සැප්තැම්බර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.09.27

***2090/34 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு குண்டசாலை - ஹாரகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் சுத்திகரிக்கப்படாத நீரை எடுத்துச் செல்வதற்காக நீர்க் குழாயை பதிப்பதற்காக மேலதிக காணிப் பகுதியொன்றின் உரிமையை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக் கட்டளையினுடாக அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, 'லக்திய மெதுர',
புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்லை.
2018, செத்தெம்பர் 25.
5/2/1/1410.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், ஹரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 420, பொல்வத்த கிராம அலுவலர் பிரிவில், கொண்டதெனிய கிராமத்தில் அமைந்துள்ள 'கொடுவகாவஹின்ன' என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 4 பேர்ச் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணித் துண்டுகள் இரண்டின் (02) எல்லைகள் :

01. **துண்டு இல. 1**

வடக்கு: திருமதி ஜே. கே. எஸ். ஜயவர்தன, (இல. 66/4, கொஹாகொட வீதி, கடுகஸ்தொட்டை) மற்றும் பத்தின் தேவாலயம் உரிமை கோரும் காணி ; கிழக்கு: இக்காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கு : இக்காணியின் மிகுதிப் பகுதி ; மேற்கு : ஆரம்ப நிலவரைபடம் கண் 5851 இன் துண்டு இல. 1, 2 மற்றும் 3.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :**

1. பஸ்நாயக நிலமே அவர்கள், ஸ்ரீமஹா பத்தினி தேவாலயம், கண்டி
2. திருமதி இந்திராணி பொன்சேகா, இல. 69/1 ஏ, கொஹெகொட வீதி, பொல்லத்த, கடுகஸ்தோட்டை மற்றும் பலர்.

02. **துண்டு இல. 2**

வடக்கு: இக்காணியின் மிகுதிப் பகுதி; கிழக்கு: இக்காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கு : திருமதி இந்திராணி பொன்சேகா, (69/1ஏ, கொஹெகொட வீதி, கடுகஸ்தோட்டை) மற்றும் பத்தின் தேவாலயம் உரிமை கோரும் காணி ; மேற்கு : ஆரம்ப நிலவரைபடம் கண் 5851 இன் துண்டு இல. 1 மற்றும் பிரதேச சபை வீதி.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :**

1. பஸ்நாயக நிலமே அவர்கள், ஸ்ரீமஹா பத்தினி தேவாலயம், கண்டி
2. திருமதி ஜே. கே. எஸ். ஜயவர்தன, இல. 66/4, கொஹெகொட வீதி, பொல்லத்த, கடுகஸ்தோட்டை மற்றும் பலர்.

10-352

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.